**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 161/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 4 |
| Name (திரு/திருமதி) | : ஜான்பீட்டர் |
| Father's Name/ Husband's Name | : உலகநாதன் |
| Village & Taluk | : கல்லாடிகுளம் |
| Calling | : விவசாயம் |
| Age | : 55 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026**

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

**1.** அ.சா.1 , அ.சா.2 ராபர்ட் சேவியர் மற்றும் ஜானிஜோஷ் ஆகியோர்களை எனக்கு தெரியும். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை வேலையில் ஜான்போஸ்கோ நிலத்தின் அருகே மாடு ஓட்டிக்கொண்டு வரும்போது மனோஜ் ஆல்வின் என்பவரும் அமுல் என்பவரும் மற்றும் ஒரு நபர் சேர்ந்து ராபர்ட் சேவியர் என்பவரை கட்டையால் தாக்கிக்கொண்டிருந்தார்கள். அதில் அவருக்கு மண்டை உடைந்துவிட்டது. பின்பு ராபர்ட் என்பவரின் அம்மாவிற்கு தகவல் சொன்னேன். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 ன்(ராபர்ட் சேவியர்) குடும்பத்தாருக்கும் எதிரிகளின் குடும்பத்தாருக்கும் இடையே முன் விரோதம் இருந்து வந்த விவரம் எனக்கு தெரியாது. நான் மாடு ஓட்டிக்கொண்டு வந்தபோது இரு தரப்பினரும அடித்துக்கொண்டனர் என்றாலும், அது மட்டும தான் தெரியும் என்றாலும் யார் யாரை எவ்வாறு அடித்துக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும், ராபர்ட் சேவியரின் குரல்வலையை அமுல் என்பவர் கையால் நெறித்தார். மனோஜ் என்பவர் அவரை தலையில் தாக்கிவிட்டார், ராபர்ட் மனோஜ்யை தடுத்தபோது மனோஜ் அவரை தாக்கினார். அதனை நான் பார்த்தேன்.

2. அ.சா.1 சம்பவத்தன்று மதுபோதையில் அமல்தாஸ் என்பவரின் அண்ணன் மகளிடம் தகாத முறையில் பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார்ல

கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. அதனை அ.சா.1, அமல்தாஸ் வீட்டினிடம் சென்று கேட்டார் என்றால் தெரியாது. அப்போது அமல்தாஸ் அ.சா.1 யிடம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுவிட்டது எனவேல காவலர்கள் விசாரிப்பார்கள் என்று கூறியதற்கு அ.சா.1 ம் அவரது குடும்பத்தினரும் தான் அமல்தாஸ்யை தாக்கிவிட்டனர் என்றால் சரியல்ல, அமல்தாஸ்" தான் ராபர்ட் சேவியரை தாக்கினார். நான் சொல்வது போல் ராபர்ட் சேவியரின் குரல்வலையை அமுல் என்பவர் கையால் நெறிக்கவில்லை என்றாலும், மனோஜ் என்பவர் அவரை தலையில் தாக்கிவில்லை என்றாலும் ராபர்ட் மனோஜ்யை தடுத்தபோது மனோஜ் அவரை தாக்கிவில்லை என்றாலும் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. ராபர்ட் சேவியரின் தலையில் இருந்து ரத்தம் வடிந்தது அவரது ஆடைகளில் ரத்த கரை இருந்ததா என்றால் இருந்தது. ராபர்ட் சேவியர் மருத்துவமனைக்கு சொல்ல நான் எந்த உதவியும் செய்யவில்லை என்றால் சரிதான். ராபர்ட் சேவியர் இவ்வழக்கு தொடர்பாக புகார் அளித்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 தான் மதுபோதையில் 3 ம் எதிரியின் வீட்டினிடம் வந்து பிரச்சனை செய்தார் என்றாலும் அப்போது அவர் தாமாக மதுபோதையில் கால் இடறி கரடுமுரடான பகுதியில் கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக்கொண்டார் என்றாலும், அதனை வைத்து எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. அ.சா.1 எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டார் என்ற விரவம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. இவ்வழக்கு தொடர்பாக நான் சம்பவத்தை பார்த்த பின்னிட்டு காவலர்கள் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனரா என்றால் இல்லை. அ.சா.1 யை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/−B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.